பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 10 2026 SATURDAY - 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களின் நம்பிக்கையை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இழந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் □ ா கூறியுள்ளார்.

2. மனநலம் தொடர்பான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. உத்தரபிரதேசத்திலிருந்து மாநிலங்களவைக்கு பிஜேபியைச் சேர்ந்த 8 பேரும், சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த 2 பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

4. தில்லியில் போராட்டம் நடத்த CJP-க்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

5. உலக Bowl சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Putul Sonowal வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

>>>>>>><<<<<<

மக்களின் நம்பிக்கையை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இழந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் □ ா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் அவதூறு பிரச்சாரங்களையும் மீறி, தேசிய ஜனநாயக கூட்டணி மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ராஜஸ்தான் மற்றும் திரிபுராவில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல்களிலும் பிஜேபிக்கு கிடைத்த வெற்றியை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியை மக்கள் நிராகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, தேர்தல் ஆணையம் உள்ளிட்ட அரசியல் சாசன அமைப்புகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாகவும் திரு. அமித் □ ா கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<

மனநலம் தொடர்பான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

உலக மனநல தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதும் தொலைபேசி வழி மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

48 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த சேவையை பயன்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மனநல பாதிப்பு அடைந்தவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருவதாக திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<

அரசுமுறைப் பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அந்நாட்டு அதிபர் திரு. *Tharman Shanmugaratnam*, பிரதமர் திரு. *Lawrence Wong* ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சுக்களின் போது விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சர்வதேச விவகாரங்கள் மற்றும் இந்தியாவில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>>>><<<<<<

அமைதிக்கான நோபல் பரிசை வென்ற திருமதி. நவநீதம் நவி பிள்ளைக்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்னாப்பிரிக்காவில் பிறந்த தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த இவர், அந்நாட்டு உயர்நீதிமன்றத்தின் முதல் வெள்ளையரல்லா பெண் நீதிபதி என்ற வரலாற்றுச் சாதனையை படைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் மற்றும் நீதியை நிலைநாட்டுவதில் சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை திருமதி. நவநீதம் நவி பிள்ளை வழங்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் சர்வதேச அளவில் இத்தகைய உயரங்களை எட்டியிருப்பது உலகத் தமிழர்களுக்கு பெருமை சேர்ப்பதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்திலிருந்து மாநிலங்களவைக்கு பிஜேபியைச் சேர்ந்த 8 பேரும், சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த 2 பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

10 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில், 10 பேர் மட்டுமே மனு தாக்கல் செய்ததால், இவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பிஜேபி சார்பில் வெற்றி பெற்றவர்களுக்கு உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

தில்லியில் பொது அமைதியை உறுதி செய்யும் வகையில், BNSS 163 தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜந்தர் மந்தரில் CJP போராட்டம் நடத்தவுள்ளதாக அறிவித்திருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தடையை மீறி போராட்டம் நடத்த முயற்சிப்போர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை எச்சரித்துள்ளது.

போராட்டம் நடத்த அனுமதி கோரி CJP சமர்ப்பித்த விண்ணப்பத்தை நிராகரித்துள்ள தில்லி காவல்துறை, பாதுகாப்பையும் பலப்படுத்தியுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக போராட்டம் நடத்த முயன்றவர்களையும் காவல்துறை தடுத்து நிறுத்தியுள்ளது.

இதற்கிடையே, தங்கள் இயக்கத்தின் முக்கிய நிர்வாகிகளை தில்லி காவல்துறை கைது செய்துள்ளதாக CJP கூறியுள்ளது.

>>>>>>><<<<<<

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பழங்குடியினரின் பங்களிப்பை எடுத்துரைக்கும் வகையிலும் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது விடுதலை போராட்டத்தில் பங்கேற்ற பழங்குடியின தலைவர்கள் குறித்த அருங்காட்சியகம்.

*( Voice over - 95 Sec. )*

( நாட்டின் விடுதலை போராட்டத்தில் பழங்குடியினர் ஆற்றிய பங்கு இன்றிமையாததாகும். இதில் முக்கியப் பங்கு வகித்தவர் பகவான் பிர்ஸா முண்டா. அவரது பிறந்த தினமான நவம்பர் 15ஆம் தேதி பழங்குடியினர் பெருமை தினமாக கொண்டாடுவதென பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு அறிவித்தது. நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட பழங்குடியின தலைவர்களின் பங்களிப்பை போற்றும் வகையில் 142 கோடி ரூபாய் செலவில் ராஞ்சியில் அருங்காட்சியகம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. பழைய மத்திய சிறையில் 30 ஏக்கர் பரப்பளவில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பழங்குடியின தலைவர்களான *Sidhu-Kanhu, Veer Budhu Bhagat, Gaya Munda* மற்றும் *Bhagavan Birsa Munda*-வின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் அம்சங்கள் இந்த அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன. நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாறு பழங்குடியினரின் பங்களிப்பை எடுத்துரைக்காமல் முழுமை பெறாது என்று கூறிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இதன் அடிப்படையில் அறியப்படாத தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை தற்போதைய தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

பழங்குடியின தலைவர்களின் பெயரில் மக்கள் நலத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டன. ஜார்க்கண்டின் கலாச்சார பெருமையை பாதுகாப்பதோடு, பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை, ஜார்க்கண்டிற்கு புதிய அடையாளத்தை வழங்கி வருகிறது என்றால் அது மிகையல்ல. )

>>>>>>><<<<<<

*Fly Dubai* விமானத்தை, டெல் அவிவ் விமான நிலையத்தின் மீது மோதி தற்கொலைப்படை தாக்குதல் நடத்த இணை விமானி திட்டமிட்டிருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளதாக ஐக்கிய அரபு எமிரேட் தெரிவித்துள்ளது.

பெரிய அளவில் உயிர் சேதத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஓமனைச் சேர்ந்த இணை விமானியின் திட்டத்தை இந்திய வம்சாவளி விமானி *Smith Machchar* முறியடித்ததாக ஐக்கிய அரபு எமிரேட் கூறியுள்ளது.

இதுதொடர்பாக இணை விமானி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<

உலக Bowl சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Putul Sonowal வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும்.

>>>>>>>><<<<<<

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி எகிப்தின் கெய்ரோவில் தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் Swapnil Kusale, Sarabjot உள்பட 11 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>>>>><<<<<<

Bendigo சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ansh Negi இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 12-21, 21-17, 21-19 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Ting Yen Chen-ஐ வென்றார்.

>>>>>>>><<<<<<

தேசிய ஓப்பன் தடகள சாம்பியன் போட்டியில் தமிழகம் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கம் வென்றது.

தில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் 400 மீட்டர் ஓட்டத்தில் ஆகாஷ்ராஜ் தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் Triple Jump பிரிவில் தினேஷ் வெள்ளிப்பதக்கத்தையும், மோகன்ராஜ் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் 100 மீட்டர் தடைஓட்டத்தில் நந்தினி வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் தமிழகம் இதுவரை 2 தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 3வது இடத்தில் உள்ளது.

>>>>>>>><<<<<<

Lexington சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sahaja Yamalapalli - Morocca-வின் Diae El Jardi இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 2-6, 7-5, 12-10 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Dalayna Hewitt - யுக்ரைனின் Veleriya Strakhova இணையை வென்றது.

>>>>>>>><<<<<<

Lagos சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் - யுக்ரைனின் Yelyzaveta Kotliar இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-7, 6-1, 10-5 என்ற செட்கணக்கில், ஆஸ்திரேலியாவின் Lizette Cabrera - ஸ்பெயினின் Maria Martinez Vaquero இணையை வென்றது.

>>>>>>>><<<<<<

துருக்கி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tara Shah மற்றும் Aakarshi Kashyap காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>>><<<<<<

தேசிய ஹாக்கி சாம்பியன் போட்டி ஜான்ஸியில் இன்று தொடங்கியது.

வரும் 21ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், தமிழகம், மஹாராஷ்ட்ரா உட்பட 29 அணிகள் பங்கேற்றுள்ளன.

>>>>>>END<<<<<<